# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 221/2014 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கணேசன் | நாள் | 29.11.2023 |
| தகப்பனார் பெயர் | கவுண்டப்பன் | | |

**பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–**

1) எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், பிரதிவாதி என்னுடைய நிலத்தை சேர்த்து எடுத்துக்கொண்டதால் அவருக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால், என் தந்தையின் சொத்து.

2) என் தந்தைக்கு மேற்படி சொத்து எவ்வகையில் பாத்தியப்பட்டது என்றால், அவர் கிரையம் வாங்கியதாக என்னிடம் சொன்னார். மேற்படி சொத்தை நானும், என் அண்ணன் முனுசாமியும் பாகம் பிரித்து கொண்டோமா என்றால் ஆமாம். மேற்படி பாக பிரிவிணையை எவ்வாறு செய்துகொண்டோம் என்றால், பாக பத்திரம் ஏற்படுத்தி பிரித்து கொண்டோம். அந்த பாக பத்திரத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோமா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி பத்திரம் தற்போது என் வீட்டில்தான் உள்ளது.

3) மேற்படி பாகபிரிவிணை பத்திரத்தின் அடிப்படையில்தான் நான் வருவாய் துறையில் விண்ணப்பித்து பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.